மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் இந்த நீண்ட நாள் துயர் துடைக்கும் ஆற்றல் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மட்டுமே உள்ளது.*

'நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்'

*என்ற ** நிரந்தரமாக அகற்றி தமிழ் மக்களைக் காத்து,*

'வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி'

என்ற குறளின் இலக்கணமாக நல்லாட்சி நடத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்து, அமைகிறேன். (குறுக்கீடுகள்) நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வாய்ப்பு தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றும் கிடையாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், கேள்வி நேரத்திலே குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய ஆட்சேபனைக்குரிய அந்த வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

65—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***2698—திரு. அ. ராமு:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

(அ) குன்னூர் தொகுதி, மேலூர் ஊராட்சி, கொலக்கம்பையிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை குன்னூர் தொகுதி, மேலூர் ஊராட்சி, கொலக்கம்பையில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தங்கத்தாரகை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகிறேன். கொலக்கம்பை சுற்றுவட்டாரப் பகுதியானது முழுவதும் தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் சுமார் 25 கிராமங்களில் வாழ்கின்ற பகுதி. எனவே, தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் மேற்படிப்பிற்கு சுமார் 8 கி.மீ. தூரம் வாகனத்தில் செல்லவேண்டியுள்ளது. கல்விக் கடவுள் சரஸ்வதி தாயின் மறு உருவமாக காலணி முதல் கணினி வரை தந்து, கல்விப் புரட்சியில் உலகத்திற்கே வழிகாட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக கல்வித் துறையின் பிதாமகள், மாண்புமிகு தமிழக நிரந்தர முதலமைச்சர் அம்மா அவர்களினுடைய கருணைப் பார்வைக்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் எடுத்துச்சென்று தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் மேற்படிப்பிற்கு வழிவகுக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

2016 ஆகஸ்ட் 12]

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 221 புதிய தொடக்கப் பள்ளிகளும், 112 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 810 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 402 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், புதிய பள்ளிகள் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட வகையிலே 1,545 பள்ளிகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் சட்டமன்ற தொகுதியில் 125 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 28 நடுநிலைப் பள்ளிகள் உள்ளன. இப்பள்ளிகளில் 5,975 மாணவ மாணவியர்களும், 412 ஆசிரியர்களும் உள்ளனர். மேலும், குன்னூர் சட்டமன்ற தொகுதியில் 22 உயர்நிலைப் பள்ளிகளும், 18 மேல்நிலைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 12,379 ஆகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கடந்த பொற்கால ஆட்சியில் குன்னூர் சட்டமன்றத் தொகுதியில் ஒரு தொடக்கப் பள்ளி புதியதாகத் துவங்கப்பட்டுள்ளது. மேலும், ஒரு தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாகவும், ஒரு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*